ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/11 - 2018 මැයි මස 30 වැනි බදාදා - 2018.05.30

*2073/11 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (xi)

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2018, மே 28.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதிய (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினைந்தாமாண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதிய 1906/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2016, ஓகத்து 25 ஆந் திகதிய 1981/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டதுமான 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சகாய நிதியக் கட்டளைச் சட்டம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.

(1) அதன் 10 ஆம் பந்தியில், உட்பந்தி (2) (ஆ) வின் (ii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் -

"(ii) ஊழியர் சகாய நிதியத்தின் கடமைகளைப் புரிவதற்காகவும் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் பணச் சபையினால் மத்திய வங்கிக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்களிடையேயிருந்து மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி ;";

(2) அதன் 26 ஆம் பந்தியில் -

(அ) "சட்டம்" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

" "மத்திய வங்கி" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும் ;";

(ஆ) "ஆணைக்குழு" என்னும் சொல்லின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

" "ஊழியர் சகாய நிதியம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியம் என்று பொருளாகும் ;";

" "மத்திய வங்கியின் ஆளுநர்" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் என்று பொருளாகும் ;"; அத்துடன்

(இ) "உயர்கல்வி நிறுவனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

" "பணச்சபை" என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும் ;".

06-610

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.